**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 91/2023**
**Deposition of witness of Plaintiff – P.W.1(சரவணபாண்டியன்)**
**09.06.2025**

**1ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. நானும், எனது அம்மா வாதியும் நிரந்தரமாக கீழக்குறிச்சி கிராமத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. அவ்வாறு கீழக்குறிச்சி கிராமத்தில் நிரந்தரமாக வசித்து வருகிறோம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேன்.

3. 2 முதல் 5 பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. 2ஆம் பிரதிவாதி வேல்முருகன் தாவா கிராமமான கீழக்குறிச்சி கிராமத்தில் வசித்து வருவதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. 3, 4 ஆம் பிரதிவாதிகள் சின்னையா மற்றும் சண்முகம் தாவா கிராமமான கீழக்குறிச்சி கிராமத்தில் வசித்து வருவதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. தாவா சொத்தின் நான்கெல்லை விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

7. தாவா சொத்தின் சர்வே எண் 108/9 ஆகும். என்னிடம் காட்டப்படும் யுடிஆர் பட்டாவில் சர்வே எண் 108/9 வேலு சேர்வை மகன் கருப்பையா பெயரில் உள்ளது என்றால் சரிதான். **அந்த பட்டா பி.வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

8. வாதியோ, அவரது தகப்பனாரோ தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்று காட்டுவதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. தற்போது தாவா சொத்திற்கு 5–ஆம் பிரதிவாதி பாலசந்தர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவை ரத்து செய்வதற்கு வேறு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான், வழக்கு தான் தாக்கல் செய்துள்ளோம்.

10. 5–ஆம் பிரதிவாதி பாலசந்தர் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய வேண்டும் என்றும், அவரை தாவா சொத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றும், வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் பட்டாவை ரத்து செய்ய வேண்டும் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

11. வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரம் 2015ல் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ..5 கிரைய பத்திரம் 2015 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். 2015 மற்றும் 2016ஆம் ஆண்டில் எனது தாயார் தாவா கிராமத்தில் தான் இருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் ஏற்பட்ட விவரம் எனது தாயாருக்கு தெரியும் என்றால் சரியல்ல, தெரியாது.

12. மேற்படி விவரம் எனது தாயாரை விசாரணை செய்தால் தெரிய வரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் பற்றி எனது தாயாருக்கு தெரியும் என்றும், ஆனால் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

13. தாவா சொத்தின் அனுபவத்தில் வாதி எந்த காலத்திலும் இருந்தது இல்லை என்றும், பிரதிவாதிகள் தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

14. வாதியின் தகப்பனார் 1950 ஆம் ஆண்டே தாவா சொத்தை 1ஆம் பிரதிவாதியின் தகப்பனார் வேலு சேர்வைக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

15. தாவா சொத்தை சட்ட காலத்திற்கு மேலாக 1ஆம் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு முழு உரிமையாளர் என்ற அடிப்படையில் தான் வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரத்தை 2ஆம் பிரதிவாதிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிவைத்தார் என்றால் சரியல்ல.

16. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.7 ஆகிய ஆவணங்கள் செல்லக்கூடிய ஆவணங்கள் என்றால் சரியல்ல.

17. வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் எந்த காலத்திலும் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு உரிமையோ, அனுபவமோ இல்லை என்றும், அது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல.

**4ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.